**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II - 2023**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ADB) இலங்கை சனநாயக சோசலீச குடியரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 3483 எஸ்ஆர்ஜ மற்றும் 3484 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவு மற்றும் 4.03 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலீச குடியரசிற்கும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்திக்கும் இடையில் கைச்சாட்ட 2018 ஒக்தோபர் 17 ஆந் திகதிய சீஎல்கே 1022 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 03 ஆம் உறுப்புரையின் 3.4.4 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மின்சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் பரிமாற்ற வினைத்திறனான உட்கட்டமைப்பு தரமுயர்த்தல், நடுத்தர வேல்டேச் வலையமைப்பின் வினைத்திறனான முன்னேற்றம் மற்றும் மின்சக்தி நோக்கத்திற்காக கேள்வி வழி முகாமைத்துவ முன்னேற்றம் போன்ற பிரதான 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென்பதே செயற்திட்ட நடவடிக்கைகளாக உள்ளன. கடன் உடன்படிக்கைப் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,808.25 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 260 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 27,985.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 11,822.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பாரர்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1. செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| இல | கூறு | 2024 மார்ச் 31 உள்ளவாறு அடையப்பட்ட செயலாற்றல் பௌதீக | நிதி | கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| (அ) | பொதி 8 லொட் B அம்பலங்கொடை உன மின்நிலைய 132/33kV இன் விரிவாக்கம், பன்னாலை உப மின்னிலையம் 132/33kV இன் விரிவாக்கம் மற்றும் 132/33kV 31.5 MVA இன் 2 ரான்பொமர் உபபாகங்களை வழங்கல் | 76 | 64 | செயற்திட்டம் பூர்த்தி யாக்குவதற்கு 3 மாதங்களே இருந்தது.<br><br>கடன் நீடிப்பு கடிதத்தின் பிரகாரம், 2023 யூன் 30 ஆந் திகதி கடன் முடிவுறுத்தும் திகதி 2024 யூன் 30 இற்று நீடிக்கப்பட்டது. இந்த நீடிப்புடன் இரண்டு கடன்களும் ஒத்ததாக 24 மாதங்கள் நீடிக்கப்பட்டதுடன் இது ADB ஆல் வழங்கப்பட்ட இறுதி நீடிப்பாக இருக்கும். கடன் முடிவுறுத்தல் திகதியை விட வேலைகள் பின்னோக்கி இருப்பின் கடப்பாட்டுக் கட்டணங்கள் எழக்கூடும். செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்ட போதிலும் செயற்திட்ட பூர்த்தியாக்கல் காலத்தை உறுதிப் படுத்துவதற்கு கடப்பாட்டுக் கட்டணங்கள் அடிகோலும். | தாமதங்களிற்காக காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

| | |
|---|---|
| முகாமைத்துவத்தின் பதில் | செயற்திட்டமானது ADB கடன் நிதிகளை பயன்படுத்தி 2022 யூலை 11 இலிருந்து செயற்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட செயற்திட்ட காலப்பகுதி 18 மாதங்களாக உள்ளது. நிதிச் சிக்கல் மற்றும் காலநிலைப் பாதிப்பு காரணமாக அந்த காலப்பகுதிக்குள் (2024 சனவரி 10) பூர்த்தியாக்க இயலாதிருந்தது. எனவே, செயற்திட்ட நீடிப்பு 2024 யூன் வரை வழங்கப்பட்டது. கடன் தகுதிக் காலத்தைக் கருத்திற்கொண்டு ஒப்பந்தகாரர் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டதுடன் 2024 யூன் இறுதிக்குள் பூர்த்தியாக்குவதற்கு இயலக்கூடியவாறு இருக்கும். |

கணக்காய்வாளரின் பரிந்துரை

வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்த்த நோக்கத்தை அடைவதற்கு ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | பொதி 9 நிர்மாண வேலைகள்: கரவெலப்பிட்டியவில் 220kV உப நிலைய சுவீச்பலகை | 96 | 89 | செயற்திட்ட வேலைகள் 2020 ஆகஸ்ட் 14 இல் தொடங்கப் பட்டிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. கால நீடிப்பு 2024 பெப்ரவரி 27 வரை வழங்கப்பட்டது. ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதியிலிரந்து ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் பௌதீக முன்னேற்றம் 96 சதவீதமாக இருந்தது. 2024 1 ஆவது காலாண்டு முன்னெற்ற அறிக்கை பிரகாரம் பௌதீக முன்னெற்ற தாமதத்திற்காக பிரதான காரணம் கோவிட் 19 நொய்தொறறு, சர்வதேச விமான நிலைய மூடுதல் மற்றும் பயணத் தடை என்பன இருந்தது. சீனா மூல GIS உற்பத்தியின் பொறுப்பின்மையால் விரிவான வடிவமைப்பு இறுதியாக்கல் தாமதப்பட்டது, சந்தையில் மூலப்பொருட் தட்டுப்பாடு மற்றும் வேலைத்தளங்களிற்கு மனிதவளத்தை ஒழுங்கு செய்வதில் பிரச்சனைகள் என்பன இந்த செயற்திட்டம் தாமதமடைவதற்கு பிரதான பிரச்சனைகளாக இருந்தது. | உபகரண வழங்கலில் தாமதம் |

முகாமைத்துவத்தின் பதில்

செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கோவிட் 19 நோய்தொற்று மற்றும் விசேடமாக இந்த காலத்தின் பொது நாட்டின் பொருளாதார சிக்கலும் பாரதூரமாக பாதிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த காரணங்களுடன் சேர்த்து, செயற்திட்ட வேலைத்த தளங்களில் இடம்பெற்ற தகராறுகளும் இடம்பெற்றது. எவ்வாறாயினும் செயற்திட்ட வேலைகள் அதிகளவான வேலைத்தள பிரச்சனைகளிறிகு தீர்வு கண்ட பின்னர் 2023 சனவரியில் மீள தொடங்கப்பட்டது. 2024 ஏப்ரல் மாதத்தில் சுவீச் பலகை தொடங்கப்பட்டது.

கணக்காய்வாளரின் பரிந்துரை

வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்த்த நோக்கத்தை அடைவதற்கு ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

## 2.2. குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கடன்வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம் செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு ஐ.அ.டொலர் 260 மில்லியனாக இருந்ததுடன் அதில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 148.16 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | கோவிட் 19 நோய்தொற்று, ஈஸ்டர் தாக்குதல், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நிர்மாண பொருட்களின் விலை ஏற்றம் (சீமெந்து, இரும்பு போன்றன) செயற்திட்ட நடவடிக்கைகளின் தாமதத்திற்கான காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், சகல கஸ்ரங்களுடனும் 2024 யூன் இறுதியளவில் சகல செயற்திட்ட கூறுகளும் பூர்த்தியாக்குவதற்கு இயலக்கூடியவாறு இருக்கும். | வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிபார்த்த நோக்கத்தை அடைவதற்கு ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

## 2.3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 7 பொதிகளில் 05 பொதிகள் பௌதீக முன்னேற்றம் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு 100 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பொதிகள் தொர்புபட்ட வாகனங்கள் 2024 மார்ச் 31 வரை இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தில் இருந்த ரூபா 430.7 மில்லியன் பெறுமதியான 45 வாகனங்கள் CEB இற்கு திருப்பி ஒப்படைக்காமல் அல்லது கையளிக்கப்படாமல் இருந்தது. | 12 பொதிகளில் 8 பொதிகளிற்காக பௌதீக முன்னேற்றம் 100 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் குறைபாட்டு பொறுப்பு காலத்தின் போது சில குறைபாடுகள் திருத்த வேண்டியிருந்ததுடன் மிகுதியாக இருக்கின்ற 04 பொதிகளை மேற்கொள்வதற்கு வாகனங்கள் தேவைப்பட்டது. செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட இருக்கின்ற வாகனங்கள் 2020 இல் வாகனங்கள் இறக்குமதியை அரசாங்கம் தடை செய்யப்பட்டதிலிருந்து பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இருக்கின்ற வாகனங்களை பயன்படுத்தவதற்கு சகல PMUs களும் நிர்வகிக்கின்றது. | பொதிகளை பூர்தியாக்குவதற்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் CEB இற்கு கையளிக்கப்பட வேண்டும். |